மா௧ அலுவ

இயக்குநர்
கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள்
09 AUG 2023
சென்னை – 600 035

**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – திருமதி. பா. லட்சுமி, க/பெ (லேட்) பி.பாபு இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப–7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது ஆடி மாதம் 19–ம் நாள்

அரசாணை (டி) எண். 507 நாள் 04.08.2023

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் ஆணையரின் கடித ந.க.எண். 15385/ஆர்3/2009, நாள் 24.08.2022.

------

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் ஆணையரின் கடிதத்தில், காஞ்சிபுரம் மண்டலம், சைதாப்பேட்டை, கால்நடை பன்முக மருத்துவமனை, முதன்மை மருத்துவர் அலுவலகத்தில் கால்நடை பராமரிப்பு உதவியாளராக பணியிலிருக்கும்போது 20.11.2007 அன்று மறைந்த திரு.பி.பாபு என்பவரது வாரிசுதாரரான திருமதி.பா.லட்சுமி என்பவருக்கு கருணை அடிப்படையில் திருவள்ளூர் (கால்நடை பராமரிப்பு) மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 07.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார், தனியரின் அனைத்து ஆவணங்கள்/சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும் எனவே தனியரது பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 07.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் மற்றும் தனியருக்கு பணப்பலன்கள் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)–ற்கு விதியினை தளர்வு செய்து ஆணை வழங்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கருத்துருவை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் ஆய்வு செய்த பின்னர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி. பா. லட்சுமி என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 07.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய

உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பணிக்கப்படுகிறது.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.16274/க்யூ-1/2022-1, நாள் 17.09.2022 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.எண்.4910873/ஜி2/2023, நாள் 07.07.2023ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35.
திருமதி. பா. லட்சுமி, இளநிலை உதவியாளர், (இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35 (வழியாக))
மாநில கணக்காயர், சென்னை-18/18(பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்

தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலளாரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உபரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

07/8/2023

பிரிவு அலுவலர்

7.8.23